**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**CC. No.351/2022 P.W.10**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கமலக்கண்ணன் | த–பெ | கந்தசாமி |
| ஊர்: | : | தருமபுரி | | |
| வயது: | : | 55/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | காவல் ஆய்வாளர் | மாவட்டம் | தருமபுரி |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.06.2026**

**எதிரி ஆஜர்.**

----------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் தருமபுரி மாவட்டம் கோட்டப்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். இதற்கு முன்பு பள்ளத்தூர் காவல் நிலையத்தில் 2015 ம் வருடம் ஆய்வாளராக பணியில் இருந்த போது 05.10.2015 அன்று 13.00 மணிக்கு நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் நூர் முகமது என்பவர் லெட்சுமணன் என்பவர் நிலையம் ஆஜர் ஆகி கொடுத்த புகாரை பெற்று நிலைய எண்.187/2015 இதச பிரிவுகள் 279, 337 இதச கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார்.

பின்னர் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலானவர்களை விசாரணை செய்து மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பை எனது வசம் ஒப்படைத்தார். இதனிடையே வழக்கின் காயம்பட்ட நபர் இறந்துவிட்ட காரணத்தால் சட்ட பிரிவினை மாற்றம் செய்து 304A இதச ஆக மாற்றம் செய்து வழக்கு கோப்பை எனது வசம் ஒப்படைத்தார். விசாரணைக்கு எடுத்து கொண்ட நான் 06.10.2015 அன்று காலை 5.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டதில் சிறப்பு சார்பு ஆய்வாளர் ஏற்கனவே மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்திருந்த காரணத்தால் நான் தனியாக ஆவணங்கள்ள எதுவும் தயார் செய்யவில்லை. பின்னர் மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்றும் காலை 9.00 மணிக்கு பிரேத விசாரணை செய்தும், பின்னர் பிரேத பரிசோதனைக்கு மருத்துவர் திரு.சரணவன் என்பவர் வசம் ஒப்படைத்து மேலும் பரிசோதனை அறிக்கை பெற்று அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7**. மேற்படி பிரேத விசாரணை சாட்சிகளை விசாரணை செய்தேன். பின்னர் வழக்கின் எதிரிகளை தேடி சென்ற நிலையில் 07.10.2015 அன்று காவல் நிலையத்தில் நின்று கொண்டிருந்தவரை வழக்கின் காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து தக்க நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் 08.10.2015 அன்று விபத்து வழக்கில் தொடர்புடைய வாகனத்தை விபத்து ஆய்விற்காக மோட்டார் வாகன ஆய்வாளர் ராஜபாண்டியன் என்பவர் வசம் ஒப்படைத்தேன். அவரிடம் இருந்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.8**. 05.11.2015 அன்று பட்டியல் சாட்சிகள் 10

முதல் 12 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் விசாரணை நிறைவு செய்து எதிரி மீது குற்ற முகாந்திரம் இருந்த காரணத்தால் மேற் சொன்ன சட்ட பிரிவின் அடிப்படையில் 05.11.2015 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

பார்வை மகஜர், மாதிரி வரைபடம் ஆகிய காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 161 ஆவணம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் கடைகள் வீடுகள் இருந்ததா என்றால் இருந்தது. அங்கு உள்ள சாட்கிள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல விசாரணை செய்தேன் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அ.சா.1 கொடுத்த புகாரை முறையாக புலன் விசாணை செய்யாமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.06.18 15:07:52 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.